# தமிழ் நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம்,, புது எண் 378, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
*தொலைபேசி எண் 24357580.*

**வழக்கு எண். 24230 / விசாரணை / 2009**

**விசாரணை நடைபெற்ற நாள் 27.01.2010.**

| | |
|---|---|
| முன்னிலை : | திரு. தி.சீனிவாசன். எம்.எஸ்சி.,<br>மாநில தகவல் ஆணையர் |
| மனுதாரர் : | திரு. ர. தனபாலன்,<br>த/பெ. ரங்கசாமி கவுண்டர்,<br>மொட்டையகவுண்டர் காடு,<br>ஆட்டையாம்பட்டி மெயின் ரோடு,<br>வெண்ணந்தூர் அஞ்சல்,<br>நாமக்கல் மாவட்டம் – 637 505. |
| பொது அதிகார அமைப்பு : | பொதுத் தகவல் அலுவலர் /<br>செயல் அலுவலர்,<br>வெண்ணந்தூர் பேரூராட்சி அலுவலகம்,<br>வெண்ணந்தூர் அஞ்சல்,<br>நாமக்கல் மாவட்டம் – 637 505. |

------

மனுதாரர் திரு. ர. தனபாலன் மற்றும் திரு. வி. சேகர், பொதுத் தகவல் அலுவலர் / செயல் அலுவலர், வெண்ணந்தூர் பேரூராட்சி, வெண்ணந்தூர், நாமக்கல் மாவட்டம் இவ்வாணையத்தில் இன்று (27.01.2010) நடைபெற்ற விசாரணைக்கு வந்திருந்தனர்.

மனுதாரர் 29.06.09 அன்று 8 இனங்களில் சில உட்பிரிவுகளில் தகவல் கேட்டு மனு செய்துள்ளார். 29.07.09 அன்று தகவல்கள் தரப்பட்டுள்ளன. குறிப்பிட்டு 4 உட்பிரிவுகளில் தகவல் கிடைக்கப்பெறவில்லை என்று 04.08.09 அன்று மேல்முறையீடு செய்துள்ளார்.

இவ்வாணையத்திற்கு 25.09.09 அன்று மேல்முறையீடு செய்த மனு இன்று (27.01.2010) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணையில் மனுதாரர் சில இனங்களுக்கு தகவல் தரப்பட்டிருந்தாலும், குறிப்பிட்டு இனம் 1 (i) , 4, 5 மற்றும் 6–க்கு தகவல் தரப்படவில்லை என்று தெரிவித்தார். விசாரணையில் மனுதாரர் கேட்டுள்ள தகவல்களும், மனுதாரருக்கு வழங்கப்பட்ட தகவல்களும் பார்வையிடப்பட்டது. மனுதாரருக்கு தகவல் பெறும் உரிமைச் சட்டப் பிரிவு 2 (ஊ) மற்றும் பிரிவு 7(9)–ன் கீழ் தகவல் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து பொதுத் தகவல் அலுவலர் இனம் 1 ( i)–ல் மனுதாரர் பைப்லைன் பழுதடைந்துள்ள விவரம் கேட்டுள்ளதால் குறிப்பிட்டு எந்த பைல்லைன் என்று குறிப்பிட்டு தகவல் கேட்காததால் தகவல் பெறும் உரிமைச் சட்டப் பிரிவு 2 (ஊ)–ன் கீழ் வரவில்லை என்று தெரிவிக்கப்பட்டதாக தெரிவித்தார். இது குறித்து மனுதாரர் இனம் 1–ல் 5–வது வார்டு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி 6–வது வார்டு வரை உள்ள பைப் லைன்கள் பற்றி தகவல் கேட்டுள்ளதாக தெரிவித்தார். மனுதாரர் இனம் 1–ல் குறிப்பிட்டு கேட்டிருந்தும் உட் பிரிவுகளில் கேட்டுள்ள விவரம் இனம் 1–ல் தெரிவித்துள்ள பைப்லைன் குறித்து தகவல் தரப்பட வேண்டும் என்று மனுதாரர் தெரிவித்தார். இனம் 4–ல் கூட்ட உறுப்பினர்கள் விண்ணப்பம் விவாதிக்கப்படும் பொருள் குறித்த விவரங்கள் தகவல் பெறும் உரிமைச் சட்டப் பிரிவு 7(9)–ன் கீழ் வழங்க இயலவில்லை என்று பொதுத் தகவல் அலுவலர் தெரிவித்ததை இவ்வாணையம் ஏற்கவில்லை. இனம் 5–ல் தீர்மான அறிக்கை குறித்தும், ஆட்சேபனைகளை குறிப்பது குறித்தும் கேட்டுள்ள தகவல்கள் தகவல் பெறும் உரிமைச் சட்டப் பிரிவு 2 (ஊ)–ன் கீழ் வரவில்லை என்று பொதுத் தகவல் அலுவலர் தெரிவித்ததை இவ்வாணையம் ஏற்கவில்லை. இனம் 6–ல் குறிப்பிட்டு ஆக்கிரமிப்பு அகற்ற செயல் அலுவலர் என்ன நடவடிக்கை எடுத்துள்ளார் என்பதற்கு பிரிவு 2(ஊ)–ன் கீழ் வரவில்லை என்று பொதுத் தகவல் அலுவலர் தெரிவித்தது குறித்து பொதுத் தகவல் அலுவலரிடம் விசாரித்ததில் ஆக்கிரமிப்பு குறித்து எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாததால் பிரிவு 2(ஊ)–ன் கீழ் தகவல் வரவில்லை என்று தகவலாக தெரிவித்ததை இவ்வாணையம் ஏற்றுக் கொண்டு கீழ்க்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

1) மனுதாரருக்கு இனம் 1 (i) , 4 மற்றும் 5–க்கு உரிய தகவலை இலவசமாக இவ்வாணை கிடைக்கப்பெற்ற 10 தினங்களுக்குள் அளித்து அதன் விவரத்தை இவ்வாணையத்திற்குத் தெரிவிக்குமாறு பொதுத் தகவல் அலுவலர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

2) மனுதாரருடைய மனுவிற்கு தகவல் தர மறுத்ததற்கும், மேல்முறையீட்டில் மனுதாரர் குறிப்பிட்டு சில இனங்களில் தகவல் தரப்படவில்லை என்று தெரிவித்திருந்தது மேல்முறையீட்டு அலுவலர் மூலம் பெறப்பட்டும் மனுதாரருக்கு முழுத் தகவலும் அளிக்காததற்கும் தகவல் பெறும் உரிமைச் சட்டப் பிரிவு 20(1)–ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான விளக்கத்தைப் பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து பெற்று ஒரு மாதத்திற்குள் இவ்வாணையத்திற்கு அனுப்புமாறு **இயக்குநர், பேரூராட்சி, சென்னை** கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

ஒப்புதல் பெறப்பட்ட நாள் 01.02.2010
ஆணையத்தின் ஆணைப்படி

தமிழ்நாடு தகவல் ஆணையம்

**( சு. மோகன தாஸ் )**
**உதவிப் பதிவாளர்**

<u>வழக்கு எண். 24230/09</u>

பெறுநர்
இயக்குநர்,
பேரூராட்சிகள் இயக்ககம்,
குறளகம்,
சென்னை – 600 108.

பொதுத் தகவல் அலுவலர் /
செயல் அலுவலர்,
வெண்ணந்தூர் பேரூராட்சி அலுவலகம்,
வெண்ணந்தூர் அஞ்சல்,
நாமக்கல் மாவட்டம் – 637 505.

திரு. ர. தனபாலன்,
த/பெ. ரங்கசாமி கவுண்டர்,
மொட்டையகவுண்டர் காடு,
ஆட்டையாம்பட்டி மெயின் ரோடு,
வெண்ணந்தூர் அஞ்சல்,
நாமக்கல் மாவட்டம் – 637 505.